to Animals Act, *1960-ன்படி, இது ஒரு தண்டனைக்குரிய குற்றம். அரசாங்கத்தால் மாட்டை பறிமுதல் செய்வதற்கும் இதிலே வழியிருக்கிறது. மேலும் ஊசி போடுபவர், பதிவு பெற்ற மருந்தாளுநராக இருக்க வேண்டும். இல்லையென்றால் 6 மாதச் சிறைத் தண்டனையோ அல்லது 1,000 ரூபாய் அபராதமோ விதிக்கப்படும். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுக்கு கூடுதல் விவரங்கள் வேண்டுமென்றால், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியினுடைய* Dean-*ஆக இருக்கின்ற அவருடைய சம்பந்தியைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

154—

அருங்காட்சியகம்

***121582—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் தொல்பொருள் ஆராய்ச்சிமூலம் கிடைக்கின்ற பழங்கால கல்வெட்டுக்கள், முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றைப் பாதுகாத்திட அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பகுதியானது தமிழக அரசின் பொறுப்பில் இல்லாமல் மத்தியத் தொல்லியல் துறையின் பொறுப்பில் உள்ளமையால் அருங்காட்சியகம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.*

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிச்சநல்லூர் என்பது திருச்செந்தூர்-திருநெல்வேலி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற ஒரு கிராமமாகும். அங்கே 150 ஏக்கர் பரப்பளவில் அகழ்வாராய்ச்சியின்போது கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கே 1,000 சதுர அடி மட்டுமே இப்பொழுது தோண்டியெடுக்கப்பட்டு, அந்த ஆராய்ச்சியானது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. 1905 ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் ரியா என்பவர் ஆராய்ச்சி மேற்கொண்டு, அதில் கிடைத்த பொருட்களையெல்லாம் பெர்லின் நகருக்கு கொண்டு சென்றுவிட்டார். 2004 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆராய்ச்சி செய்து, நம்முடைய கோட்டையில் அமைந்திருக்கின்ற அருங்காட்சியகத்தில் அந்தப் பொருட்களை வைத்திருக்கிறது. திருச்செந்தூர்-திருநெல்வேலி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற காரணத்தால், திருச்செந்தூருக்கு வெளிநாட்டவர்களும், உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களும் வந்து செல்கின்ற காரணத்தால், ஆதிச்சநல்லூரில் ஒரு அருங்காட்சியகம் அமைந்தால் அவர்களெல்லாம் நம்முடைய பழம்பெருமையைத் தெரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் அங்கே ஓர் அருங்காட்சியகத்தை தமிழக அரசு மத்திய அரசோடு பேசி அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் சில திருத்தங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பகுதி பெருங்கற்கால, புதைவுக்காலப் பகுதி. அங்கே கல்வெட்டுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. அங்கே பெரும்பகுதிகளிலே கிடைக்கப்பெற்றவை எல்லாம் முதுமக்கள் தாழிகள்தான். இன்னொன்று, 1905 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் ரியா மேற்கொண்ட அகழாய்விலே கிடைக்கப்பெற்ற பொருட்கள் நம்முடைய சென்னையிலே இருக்கக்கூடிய அரசு அருங்காட்சியகத்திலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவை பெர்லின் நகரிலே இல்லை. 1876 ஆம் ஆண்டிலே டாக்டர் ஜாகர்ஸ் அங்கே ஆய்வு நடத்தியபோது கிடைத்த பொருட்கள் பெர்லின் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அது உறுதி செய்யப்படவில்லை.

2010 மே 10]

முற்பகல் 9-55

அவர் சொல்லக்கூடிய அந்த ஆதிச்சநல்லூர் பகுதியை நானும் மத்திய தொல்லியல் துறையினுடைய கண்காணிப்பாளர் திருமதி சத்தியபாமா பத்ரிநாத் அவர்களும் நேரிலே சென்று ஆய்வு மேற்கொண்டோம். அந்தப் பகுதி முழுமையாக ஒரு protected site-ஆக இருக்கிற காரணத்தால் அங்கே வைப்பதற்கு இடமில்லாமல் இருக்கிறது. அருகில் இருக்கக்கூடிய தனியார் நிலங்கள் எதையேனும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசுக்கு வழங்கக்கூடிய வாய்ப்பிருக்குமென்று சொன்னால் நிச்சயமாக அரசுத் தரப்பிலே ஆய்வுகளை மேற்கொண்டு, மத்திய தொல்லியல் துறைக்கு அதுகுறித்த பரிந்துரைகளை அனுப்பி வைப்பதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தாமிரபரணி ஆற்றுக்கு தென்பக்கம்தான் இந்த அகழ்வாராய்ச்சியை நடத்தியிருக்கிறார்கள். வட பகுதியில் அந்த ஆராய்ச்சி செய்யப்படும்போது அங்கே உலோகங்களும், வெண்கலமும் கிடைக்க வாய்ப்பிருப்பதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். எனவே, ஆற்றுக்கு வட பக்கம் ஆராய்ச்சி செய்வதற்கு நம்முடைய அரசின் சார்பில் திட்டம் ஏதும் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுக்கு வடபுறம் இருக்கக்கூடிய மண்மேட்டில் ஆய்வுகள் செய்வது குறித்து மத்தியத் தொல்லியல் துறையில் கருத்துருக்கள் ஏதும் பரிசீலனையில் இருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை. அப்படி ஏதேனும் அங்கே ஆய்வுகள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படுமானால் அதுகுறித்த விவரங்களை உறுப்பினருக்கு அரசு தெரிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

[2010 மே 10

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கேரள மாநிலத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்திருக்கின்ற ஆதாரங்கள் எல்லாம் தமிழக வரலாறு தொடர்பாக குறிப்பாக, சங்ககாலம் பற்றிய ஆதாரங்கள் ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. இதுபற்றிய தகவல்கள் பத்திரிகைகளில் ஒரு வாரத்திற்கு முன்பு வெளியாகி இருக்கின்றன. அந்த ஆதாரங்களைப் பெற்று தமிழகத்தில் வைப்பதற்கு நம்முடைய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளப் பகுதிகளில் குறிப்பாக, சில கடற்கரைப் பகுதிகளில், காந்தலூர் சாலை போன்ற பகுதிகளிலே, விழிங்கத்திலே இதுபோன்ற ஆய்வுகள் கேரள தொல்லியல் துறையின்மூலமாக மேற்கொள்ளப்பட்டபோது அங்கே இருக்கக்கூடிய ஆதாரங்கள் நம்முடைய சங்க காலத்தின் தொடர்புடைய ஆதாரங்களாக இருக்கின்றன என்ற தகவலை அரசும் அறிந்திருக்கிறது. எனவே, இதுகுறித்து தேவைப்பட்டால் தொடர்ந்து கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை அருகிலே இருக்கக்கூடிய திருமலையில் சமணர்கள் படுக்கைகள் இருக்கின்றன. அங்கே சமணர்கள் வாழ்ந்ததற்கான பாறைகளிலான வீடுகள் மற்றும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பாறைகளிலே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் குடவரைக்கோயில் அங்கே சிறப்பாக அமைக்கப்பட்டு அதிலும் தமிழ் பிராமி எழுத்துக்களில் வரலாறை எழுதியிருக்கிறார்கள். ஆனால் இதுவரை அதிகாரபூர்வமாக தொல்லியல் துறையிலிருந்து அதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளாமல், தனி நபர்கள் அல்லது மாணவர்கள் என்கிற அடிப்படையிலே ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அந்த வரலாறுகள் முழுமையாகப் புரியவில்லையென்று சொல்கிறார்கள். அந்த அடையாளங்கள் இப்போது பாதுகாக்கப்படாமல்

2010 மே 10]

அழிக்கப்பட்டும், அந்தத் தமிழ் எழுத்துக்கள்மீது கோயிலை வழிபடக்கூடியவர்கள் வர்ணங்கள் பூசியும் அழிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தன்னுடைய துறையின் உயர் அதிகாரிகளை, ஆய்வாளர்களை அங்கு அனுப்பி அந்த அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மலையின் எழிலார்ந்த சூழலில் அங்கே சமணர்கள் நீண்டகாலம் வாழ்ந்து, மதுரைக்கும் சிவகங்கைக்கும் அருகில் இருக்கிற அந்தப் பகுதிகளின் வரலாறுகளை எழுதியிருப்பார்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிற சூழ்நிலையில், துறை அதிகாரிகள்மூலமாக ஆய்வுகளை மேற்கொண்டு அதைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏறத்தாழ 90 இடங்களுக்கு மேற்பட்ட இடங்களிலே தமிழ் பிராமி கல்வெட்டுகள் இருக்கின்றன. அதிலே நம்முடைய உறுப்பினர் குறிப்பிடக்கூடிய திருமலையிலும் தமிழ் பிராமி கல்வெட்டுகள் இருக்கிறதென்பதை அரசு அறியும். ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் 90 இடங்களுமே அரசின் சார்பிலே பாதுகாக்கப்பட்ட இடங்களாக இல்லை. ஆனால் திருமலையிலே இருக்கக்கூடிய அந்த தமிழ் பிராமி கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வோடு தொல்லியல் துறையின் சார்பில் அந்தப் பகுதியை protected monument-ஆக அது பாதுகாக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னமாக அறிவிக்கக்கூடிய பணிகளை அரசு ஏற்கெனவே மேற்கொண்டிருக்கிறது. சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் நானும் துறையினுடைய Commissioner of Archaeology இருவரும் திருமலைக்கு நேராகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு அந்தப் பணிகளை வேகப்படுத்தி முறையான வகையிலே அந்த இடத்தைத் தொல்லியல் சின்னமாகப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்கிற உறுதியை அளிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. மு. அப்பாவு.

[2010 மே 10

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆறு கடலில் கலக்கின்ற புன்னக்காயல் பகுதியில் ஆற்றின் முகத்துவாரத்தில் இரண்டு பகுதிகளிலும் பழங்காலத்துக் குகைகள் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை இதுவரை நம்முடைய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்--மத்திய அரசோ, மாநில அரசோ இதுவரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் இப்போது அதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலே பழையகாயல் பகுதி, அதைப்போல கொற்கை போன்ற பகுதிகளெல்லாம் நம்முடைய வாணிபத் தொடர்புடையப் பகுதிகள். சங்க காலம் தொட்டு பழைய ரோம நாணயங்கள் என்று பல நாணயங்கள் நமக்கு அந்தப் பகுதியிலே கிடைத்திருக்கின்றன. அவர் சொல்வதைப்போல அந்த இடத்திலே ஏதும் குகைத் தலங்கள் இருக்கின்றனவா என்பதை இதுவரைக் கண்டறிந்து எங்களுக்குத் தகவல் தெரிவிக்கவில்லை. துறையினுடைய சார்பில் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அப்படி ஏதேனும் தொல்லியல் சம்பந்தப்பட்ட குகைகள் அங்கே இருப்பதாகத் தெரியவந்தால் அது குறித்த ஒரு பூர்வாங்கமான ஆய்வினை நடத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் இருக்கின்ற, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற புராதனமான கோயில்கள், கன்னியாகுமரி கோயில், சுசீந்திரம் கோயில் போன்ற கோயில்களெல்லாம் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்கள். இப்போது 10 நாட்களுக்கு முன்னர் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அங்கிருக்கின்ற கோயில்களில் இருக்கின்ற

2010 மே 10]

சின்னங்களில் எல்லாம் பாண்டிய மன்னர்கள் அவர்களுடைய சின்னமான மீன் சின்னத்தைப் பொறித்திருந்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கோயில்களில் பார்த்தீர்களென்றால், பக்கத்தில் இருக்கிற கேரளாவைச் சார்ந்தவர்கள் அந்தக் கோயிலைப் பராமரித்து வருகிறார்கள். திருவாங்கூர் தேவஸ்தானத்தின் சார்பாக நிர்வகித்து வருவதால் அந்தச் சின்னங்களெல்லாம் அழிக்கப்பட்டு, தமிழகத்தினுடைய பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட அந்தப் புராதனமான கோயில்களிலே உள்ள மீன் சின்னம் அழிக்கப்பட்டு, அவர்களுடைய சின்னமான யானைச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருக்கிற சில கோயில்களிலே வர்ணங்கள் பூசப்பட்டு, மறைக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கண்டுபிடித்து, பண்டைய தமிழக பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட அந்தக் கோயில்களில் மீண்டும் அந்த மீன் சின்னத்தைப் பொறிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, அவர் குறிப்பிடுவதைப்போல, தென் தமிழகத்திலே இருக்கக்கூடிய பல கோயில்கள் பாண்டிய மன்னர்களாலே கட்டப்பட்ட கோயில்கள். பாண்டிய மன்னர்கள் வெற்றிபெற்ற இடங்களிலேகூட அந்த மீன் சின்னம் பொறிப்பது என்பது உண்டு. சிதம்பரத்திலே இருக்கக்கூடிய தெற்கு கோபுரத்திலேகூட நீங்கள் பார்ப்பீர்களென்று சொன்னால், சுந்தர பாண்டியனால் பொறிக்கப்பட்ட மீன் சின்னத்தை இன்றைக்கும் நீங்கள் அங்கே பார்க்கலாம். அதுபோன்ற சின்னங்களை அழிக்கக்கூடிய முயற்சிகள் நடைபெற்றிருப்பதாக அரசுக்கு ஏதும் அதிகாரபூர்வமான தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களாலே அப்படி நம்முடைய மீன் சின்னங்கள் அழிக்கப்பட்டு வேறு சின்னங்கள் பொறிக்கப்பட்டிருப்பதாக அரசுக்கு இதுவரையில் முறையான தகவல் இல்லை.

நான் இதுகுறித்து, நம்முடைய மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் கலந்துகொண்டு, ஏனென்றால், கோயில்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட கோயில்களிலே அதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றனவா என்பதை நான் அவரிடத்திலும் கலந்துகொண்டு, அப்படிப்பட்ட நிகழ்வு ஏதேனும் இருக்குமென்று சொன்னால் அதுகுறித்து அரசு முறையான நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

குடிநீர்த் தொட்டி

***29960—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் காட்டு விலங்குகளுக்கு வனப் பகுதியில் தரைமட்ட குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் வன விலங்குகளுக்கு வனப் பகுதியில் தரைமட்ட குடிநீர்த் தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியானது மேற்குத் தொடர்ச்சி